# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,474 — 1939 ம் ௵ ஆவணி ௴ 18 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

*ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.*

*முன்னேஸ்வரக் கோவில் திருவிழாப் பிரமாணங்கள்.*

ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டத்தின் (133 ம் அதிகாரம்) 2 ம் பிரிவின்கீழ் நான் பெற்ற அதிகாரத்தைக்கொண்டு இலங்கைத் தேசாதிபதி யாகிய அந்திரு கொல்டிக்கற் ஆகிய நான், வழக்கம்போல் 1939. ம் ஆண்டு ஆவணி மாசத்தில் தொடங்கி நடக்கும் முன்னேஸ்வரத் திருவிழாவை எதிர்நோக்கி, இந்த விளம்பரத்தினால் கீழ்க்காட்டப்படும் பிரமாணங்களை ஆக்குகின்றேன்.

ஏ. கொல்டிக்கற்,
தேசாதிபதி.

1939 ம் ஆண்டு ஆவணி ௴ 12 ந் ௳.

*பிரமாணங்கள்.*

1. இந்த விதிகளில் " வாடியின் இடப்பரப்பு " என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் அடங்கிய விஸ்தாரத்தைக் கருதும்.

" உதவி அரசாட்சி ஏசன்றர் " என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடிவீடு கட்டக்கூடாதென்று விலக்கிவைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலசலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப் பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (*a*) வாடிக்குரிய இடப்பரப்பில் ஆடுமாடு வைத்திருக்கப்படாது. உதவி அரசாட்சி ஏசன்றரால் ஆடுமாடு கட்டுகிறதற்கு அனுமதி கொடுக்கப்பட்ட ஒரு இடத்தில் அல்லது ஒரு மாட்டுக் காலையாகப் புறம்பாக நியமிக்கப்பட்ட ஒரு இடத்தில் ஒழிய வாடிக்குரிய இடப்பரப்புக்குச் சமீபமாக ஆடுமாடு வைத்திருக்கப்படாது.

(*b*) ஆடுமாடுகளைத் தன்பொறுப்பில் வைத்திருப்பவன் வாடிக்குச் சேர்ந்த இடப்பரப்பில் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடுமாடுகள் நிற்கும் இடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரபபுக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசிபடியாமலும் இருக்கும்படி (*a*) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும். அல்லது (*b*) கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும். அல்லது (*c*) வைத்திய உத்தியோகஸ்தரால் வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப் பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்கு கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும் தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளை நோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக் காரரை, யாத்திரை ஸ்லத்தை விட்டுப்போகும்படி செய்தும் அவர்கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிக்கலாம்.

9. (*a*) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்துவியாதியுள்ள ஒவ்வொருவரும் அல்லது (*b*) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டெனஅறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை அல்லது கிணற்றை ஒரு குடிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாகவைத்து அதைக் குறித்த ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தை அல்லது அக்கிணற்றை அது ஒரு புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பான் போர்றணை, சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ்லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெறுமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுகோடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைந்திருக்குமிடங்களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தை துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

முன்னேஸ்வரக்கோயில் திருவிழா வாடி எல்லை.

வடக்கு :—பாலேக்குளம், கொஹொம்பகஸ்பிற்றிய ; முத்தறந்தனுவ ; முன்னேஸ்வரம் குளம்.

தெற்கு :—முன்னேஸ்வரம் வயல் ; நல்லநாயகன் குளம்.

கிழக்கு :—முன்னேஸ்வரம் குளம் ; சிலாபத்திலிருந்து குருனுகலுக்குப் போகும் பெரு வழி ; நல்லநாயகன் குளம்.

மேற்கு :—முன்னேஸ்வரம் வயல்; சிலாபத்திலிருந்து குருனுகலுக்குப் போகும் பெருவழி, பாலேக்குளம்.

---

நாயைப் பதிவுசெய்தற் சட்டம்.

நாயைப் பதிவுசெய்தற் சட்டத்தின் (அதி. 334) 4 ம் பிரிவின்படி, கோட்டை பட்டின சபையினது பரிபாலன எல்லைகளுக்குட்பட்ட இடப்பரப்புக்கு, அதற்குத்தகுந்த அதிகாரியால், அதாவது, கோட்டை பட்டின சபைத்தலைவர் அவர்களால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

பட்டின சபைக் கந்தோர், கோட்டை, 1939 ம் ஆண்டு ஆவணிமீ 10 ந் உ.

டொனல்ட் ஒபயசேகர, தலைவர்.

உபவிதிகள்.

1. இவ்வுபவிதிகளில்—

" தலைவர் " என்பது கோட்டை பட்டினச் சபைத் தலைவர் எனப் பொருள்படும்.

" சபை " என்பது கோட்டை பட்டின சபை எனப் பொருள்படும்.

" வருடாந்தப் பதிவு வேதனம் " என்பது சட்டத்தின் 4 ம் பிரிவின்படி சுமத்தப்படவேண்டிய வருடாந்தப் பதிவு வேதனம் எனப் பொருள்படும்.

" சொந்தக்காரர் " என்பது ஓர் நாய் சம்பந்தமாக, அந்நாயைத் தன்வசமாக அல்லது உடைமையாக வைத்திருப்பவரை யுளப்படுத்தும்.

2. " வருடாந்தப் பதிவு வேதனம் " ஒவ்வொரு நாயின் சொந்தக்காரரால் சபைக் கந்தோரில் கட்டப்பட வேண்டுவதோடு—

(*a*) யாதேனும் ஓர் வருடத்து மார்ச் (பங்குனி)மீ 31 ந் தேதிக்கு முன்னர் தனது உடைமையாகவிருந்த ஓர் நாய் விஷயத்தில், அவ்வருடத்து மார்ச்மீ 31 ந் தேதிக்கு முன்னர் கட்டப்பட வேண்டும்.

(*b*) யாதேனுமோர் வருடத்து மார்ச்மீ 31 ந் தேதிக்குப் பின்னர் உடைமையாக வரும் ஓர் நாய் விஷயத்தில், அப்படிப்பட்ட நாய் தனது உடைமையாக வந்த தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் கட்டப்பட வேண்டும்.

3. வருடாந்தப் பதிவு வேதனம் கட்டப்பட்டதும், [illegible] நாயின் சொந்தக்காரருக்கு—

(i) ஓர் பதிவுச் சாட்சிப்பத்திரத்தையும்,

(ii) பதிவுச் சாட்சிப்பத்திரத்தின் இலக்கம் பொறிந்த தகட்டுத் துண்டினை அல்லது கழுத்துப்பட்டியையும் கொடுத்தல் வேண்டும்.

(புறனடை) ஆயின், பதிவுசெய்தற்கு விண்ணப்பஞ்செய்யப்பட்ட எந்த நாயினையும் கொண்டுவரும்படி தலைவர் கட்டளையிட்டு—

(*a*) அந்த நாய் கொண்டுவந்து காட்டப்படாதிருப்பின் ; அல்லது

(*b*) தலைவரது கருத்தின்படி, அந்த நாய் உறுப்புக் குறைந்ததாயிருப்பின் அல்லது வாழ்தற்குத் தகுதியற்றதாக நோய்வாய்ப் பட்டிருப்பின் ; அல்லது

(*c*) அந்த நாய் அதனுடைய சொந்தக்காரரால் வழக்கமாகத் துன்புறுத்தப்படின் அல்லது புறக்கணிக்கப்படின்,

அந்த நாயின் விஷயத்தில் ஓர் பதிவுச் சாட்சிப்பத்திரத்தையும் தகட்டுத் துண்டினை அல்லது கழுத்துப்பட்டியையும் கொடுக்க மறுக்கலாம்.

4. பதிவுச் சாட்சிப்பத்திரம் கொடுக்கப்பட்ட யாதேனும் ஓர் நாயின் சொந்தக்காரரது மேல்வாசக இடத்தில் விடப்படும் அறிவித்தலின் பின்னர், தலைவர்,

(*a*) அந்த நாய், தலைவரது கருத்தின்படி உறுப்புக் குறைந்ததாயிருப்பின் அல்லது வாழ்தற்குத் தகுதியற்றதாக நோய்வாய்ப் பட்டிருப்பின் ; அல்லது

(*b*) அந்த நாய் அதனுடைய சொந்தக்காரரால் வழக்கமாகத் துன்புறுத்தப்படின் அல்லது புறக்கணிக்கப்படின் ; அல்லது

(*c*) அந்த நாய் தொற்று நோயால் அல்லது ஒட்டு நோயால் பீடிக்கப் பட்டிருக்கும்பொழுது, வேறெந்த நாயுடனும் கூடி நடமாடுதற்கு அதனுடைய சொந்தக்காரரால் அனுமதிக்கப்படின், அப்படிப்பட்ட பதிவுச் சாட்சிப்பத்திரத்தை அழித்துவிடலாம்.

5. (1) (3) ம் உபவிதியின்படி பதிவுச் சாட்சிப்பத்திரம் மறுக்கப்பட்ட அல்லது 4 ம் உபவிதியின்படி அழிக்கப்பட்ட யாதேனும் ஓர் நாயின் சொந்தக்காரர், அவ்விஷயமாக ஓர் அறிவித்தல் தலைவரால் சேர்க்கப்படுமிடத்து, தலைவரால் நியமிக்கப்பட்டு அவ்வறிவித்தலிற் குறிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும், அந்த நாயைக் கொண்டுவர வேண்டும்.

(2) அப்படிப்பட்ட நாய் ஒவ்வொன்றும் அழிக்கப்படலாம் அல்லது தலைவர் தகுதியெனக் கருதியவாறு பிரயோகிக்கப்படலாம்.

6. தகட்டுத்துண்டு அல்லது கழுத்துப்பட்டி கொடுக்கப்பட்ட யாதேனும் ஓர் நாயின் சொந்தக்காரர், அந்த நாயின் விஷயத்தில் கொடுக்கப்பட்ட பதிவுச் சாட்சிப்பத்திரம் பெலப்புடையதாயிருக்கும் காலம் வரையும், எப்பொழுதும் அந்த நாயின் கழுத்தைச்சுற்றி, அத்தகட்டுத் துண்டை அல்லது கழுத்துப்பட்டியைப் பத்திரமாய்க் கட்டுதற்குத் தேவையான வழிவகைகள் யாவற்றையும் செய்தல் வேண்டும்.

7. இவ்வுபவிதிகளின்படி தலைவர்மீது ஏற்படுத்தப்பட்ட தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் செலுத்துதற்கு எவருக்காவது தலைவர் எழுத்துமூலம் அதிகாரம் கொடுக்கலாம்.

8. சபையால் உண்டாக்கப்பட்டு, 1933 ம் வருடம் ஜூன்மீ 23 ந் தேதி, 7,987 ம் இலக்கத்தைக்கொண்ட கெசற் பத்திரிகையிலும் 1936 ம் வருடம் டிசெம்பர்மீ 4 ந் தேதி, 8,259 ம் இலக்கத்தைக்கொண்ட கெசற் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்ட உபவிதிகள் இத்தால் நிவாரணமாக்கப்படுகின்றன.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எலரை-யோத எலயைப் புதுப்பிக்கிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 575. குறிச்சி—எலரை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | இரிமெட்டியாவத்த .. | தோட்டம் .. | (1) இரிமெட்டியகெதற டிங்கிரி பண்டா, எலாரை.. (2) கோன்காவெல பழைய கோறுலே உக்குபண்டா, (3) அம்பன எட்மன், எச். எம். பி. ஒப்பால்கல | 0 | 0 | 13·2 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 3·1 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 10 |
| 4 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 14·7 |
| 5 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 9·1 |
| 6 | மொரகொள்ளவத்த .. | ஷை .. | எலாரை மொரகொள்ளகெதற டிங்கிரி பண்டா .. .. | 0 | 0 | 6·2 |
| 7 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 25 |
| 8 | இடன்கெதறவத்த .. | ஷை .. | (1) எலாரையிலிருக்கும் இடன்கெதற கௌறுலே, (2) முதியான்சே, (3) ஈன்பண்டா | 0 | 0 | 10·2 |
| 9 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 2 |
| 10 | அலத்கெதறவத்த .. | ஷை .. | (1) எலாரையிலிருக்கும் அலத்கெதற புஞ்சி பண்டா, (2) மேற்படி அப்புஹாமி | 0 | 0 | 6·1 |
| 11 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 13·1 |
| 12 | வீயென்னவத்த .. | ஷை .. | எலாரை மொறகொள்ளகெதற டிங்கிரி பண்டா .. .. | 0 | 0 | 13 |
| 13 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 7·7 |
| 14 | வென்தேசிகெதறவத்த .. | ஷை .. | (1) வென்தேசிகெதறவத்த ஹீறுலே, (2) மேற்படி கிரிமெனிக்கா | 0 | 0 | 27·2 |
| 15 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 12·1 |
| 16 | லூலாவத்த .. | ஷை .. | (1) எலாரை பாலகெதற புஞ்சிபண்டா, (2) புவாக்பிட்டிய பாலகெதற ஹீறுலே | 0 | 0 | 5·1 |

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 17 | ஹூலாவத்தையும் பிரசமூல வத்தையும் | தோட்டம் .. | (1) எலாரை எட்மன் ஏ. எம். புஞ்சி பண்டா, (2) கம்பாா கோருளே எம். டபிள்யு. ஆர். பண்டா, (3) எலம்பககாவத்த டபிள்யு. கலுபண்டா, (4) எலம்பகஹவத்த எட்மன் டபிள்யு. உக்கு பண்டா | 0 | 0 | 18·1 |
| 18 | பாலகெதறவத்த .. | ஷை .. | (1) எலாரைபாலகெதற புஞ்சிபண்டா, (2) புவாக்பிட்டியபாலகெதற கிருளே | 0 | 0 | 11·1 |
| 19 | பாலகெதறவத்த .. | ஷை .. | எலாரைபாலகெதற புஞ்சி பண்டா .. .. .. | 0 | 0 | 3·9 |
| 20 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 0·6 |
| 21 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 2 | 7·1 |
| 22 | மெனுன்னேலவத்த .. | ஷை .. | (1) மெனுன்னேலவத்த ஓரதலா, (2) மேற்படி எலாரை கிரு மயினர், (3) கந்தபிட்டவே சொபனி, (4) எலாரை மெனுன்னேலகெதற கலு | 0 | 0 | 9·7 |
| 23 | அம்பகஹகெதறவத்த .. | ஷை .. | எலம்பகஹவத்த (1) இஹலகெதற புஞ்சி அம்மா, (2) மேற்படி முத்து மெனிக்கா, (3) ஹெத்முதியான்சேலாகெதற புஞ்சிஅம்மா | 0 | 0 | 6·1 |
| 24 | தேவாலவத்த .. | — .. | (1) பாலகெதற புஞ்சிபண்டா, (2) மேற்படி புவாக்பிட்டிய கிருளே .. | 0 | 0 | 1 |
| 25 | பாலகெதறவத்த அல்லது தேவாலவத்த | — .. | (1) அத்தறகல்லேவ எட்மென் பாலகெதற கிரிபண்டா, (2) மேற்படி கொட்டவெல்ல டிக்கிரிபண்டா, (3) மேற்படி எலாரை புஞ்சிபண்டா | 0 | 1 | 35·5 |
| 26 | ஷை .. | — .. | ஷை .. .. .. | 0 | 1 | 13·2 |
| 27 | கிரிமெட்டியகெதறவத்த .. | தோட்டம் .. | (1) எலாரை கிரிமெட்டியாகெதற டிங்கிரி பண்டா, (2) கோன்காவெல பழைய கோறளே உக்குபண்டா, (3) அம்பன எட்மென் எச். எம். பீ. ஒப்பால்கல | 0 | 0 | 3 |
| 28 | ஷை .. | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 0 | 13·6 |
| 29 | மொறகொல்லவத்த .. | ஷை .. | எலாரை மொறகொல்லகெதற டிங்கிரிபண்டா .. .. | 0 | 0 | 15·8 |
| 30 | இடங்கெதறவத்த .. | ஷை .. | (1) இடங்கெதற கௌருலே, (2) மேற்படி முதியான்சே, (3) மேற்படி ஈன் பண்டா, எலாரை | 0 | 0 | 8·6 |
| 31 | அலுத்கெதறவத்த .. | ஷை .. | (1) அலுத்கெதற புஞ்சி பண்டா, (2) மேற்படி அப்புஹாமி, எலாரை .. | 0 | 0 | 18 |
| 32 | வீயென்னவத்த .. | ஷை .. | எலாரை மொறகொல்லகெதற டிங்கிரி பண்டா .. | 0 | 0 | 12·2 |
| 33 | வெந்தேசிகெதறவத்தையும் வீயென்னவத்தஹேனவும் | ஷை .. | (1) கிரிபத்கும்புறகெதற புஞ்சிபண்டா, (2) மேற்படி உக்குஅம்மா, எலாரை, (3) எலம்பகாவவத்த உக்குபண்டா, (4) மேற்படி கலுபண்டா | 0 | 0 | 2 |
| 34 | ஷை .. | ஷை .. | (1) எலாரை வெந்தேசிகெதற கிருலே, (2) மேற்படி பிலிஉடுகொள்ள கிரி மெனிக்கா | 0 | 0 | 16·8 |
| 35 | வீரகஹமுலவத்த .. | ஷை .. | (1) எலாரை எட்மென் எம். எம். புஞ்சி பண்டா, (2) கம்பராவ கோறளே எம். டபிள்யு. ஆர். பண்டா, (3) டபிள்யு. கலு பண்டா, (4) எலம்பகஹ வத்த எட்மென் டபிள்யு. உக்கு பண்டா | 0 | 0 | 13·5 |
| 36 | பாலகெதறவத்த .. | ஷை .. | (1) எலாரை பாலகெதற புஞ்சிபண்டா, (2) மேற்படி புவாக்பிட்டிய கிருளே .. | 0 | 0 | 9·5 |
| 37 | மெனென்னெலகெதறவத்த | ஷை .. | (1) மெனன்னேலகெதற ஓரத்தலா, (2) மேற்படி எலாரை கிரா, மயினர்கள், (3) மேற்படி கந்தேபிட்டவெல சொபனு, (4) மேற்படி எலாரை கலு | 0 | 0 | 13·6 |
| 38 | அம்பகஹகெதறவத்த .. | ஷை .. | (1) இஹலகெதற புஞ்சி அம்மா, (2) மேற்படி முத்துமெனிக்கா, (3) ஹேறத் முதியான்சேலாகெதற புஞ்சி அம்மா, எலம்பகஹவத்த | 0 | 0 | 13·8 |
| 39 | தேவாலவத்த .. | ஷை .. | (1) எலாரை பாலகெதற புஞ்சிபண்டா, (2) மேற்படி புவாக்பிட்டிய கிருலே.. | 0 | 0 | 8·5 |
| 40 | — .. | புது ரேட்டு .. | எலாரை பழைய ஆராச்சி ஜே. ஈ. எம். டிங்கிரிபண்டா .. | 0 | 0 | 13 |
| 41 | — .. | ஷை .. | (1) கே. புஞ்சி ருலே, (2) கே. கிரிபண்டா, (3) கே. அப்புஹாமி, (4) கே. உக்குஅம்மா, எலாரை | 0 | 0 | 9·4 |
| 42 | — .. | ஷை .. | (1) கே. முதியான்சே, (2) கே. உக்குஅம்மா, (3) கே. அப்புஹாமி, (4) கே. கலுபண்டா, (5) கே. யீன் அம்மா, (6) கே. யீன் உக்குபண்டா, (7) பீ. உக்குபண்டா, (8) டீ. லொக்கு உக்குபண்டா, எலாரை | 0 | 0 | 11·5 |
| 43 | — .. | ஷை .. | (1) கே. முதியான்சே, (2) கே. அப்புஹாமி, (3) கே. புஞ்சிபண்டா, (4) கே. பண்டிரால, (5) கே. கே. கலுபண்டா, எலாரை | 0 | 0 | 16·4 |
| 44 | கிரிபத்கும்புரகெதறவத்த, தலகொடயாவத்த | ஷை .. | ஷை .. .. .. .. | 0 | 1 | 21·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சி மந்திராலோசனைச் சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939 ம் ஹூ (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 19 ந் தேதியிலன்டு காலை 9.30 மணிக்கு எலஎர இஞ்சினீயர் ஆபீசில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி, 
1939 ம் ஹூ (ஒகஸ்ற்) ஆவணிமீ 15 ந் உ.

ஆர். எச். டீ. மெண்டேர்ஸ், 
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பெல்மதுளை-கல்பே ரேட்டின் 73 ம் மைல் கட்டையிலிருக்கும் முடக்கைத் திருத்த என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 200. குறிச்சி—குனுவல வடக்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 479 | பெலங்கஹவத்த .. | 4 வாழைமரங்களுள்ள தோட்டம் .. | குனுவலையிலிருக்கும் சான்சி லெப்பே மரிக்கார் அப்துள்ளா | 0 | 0 | 1·2 |
| 480 | ஷை .. | 10 வாழைமரங்களும், 1 மண்ணுல்கட்டியதும் ஓட்டால் வேய்ந்ததுமான கடையுள்ள தோட்டம் | விஜயதுங்க பதபெண்டிகே வில்லியம் சில்வாவும் மறுபேரும் | 0 | 0 | 4·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் நியமிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1939 ம் ஹூ (செப்டம்பர்) புரட்டாதி மாசம் 11 ந் தேதியிலன்று பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி, 
1939 ம் ஹூ (ஒகஸ்ற்) ஆவணிமீ 15 ந் உ.

ஆர். எம். டேவிஸ், 
சப்பிரகாமு மாகாண, அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பட்டகமா ஸ்கீமில் ஓர் கல் வாய்க்கால் கட்டுகிறதென்றும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்சொல்லப்படும் காணிகளே, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A 244. குறிச்சி—கலத்தற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிற்றவெல அஸ்வெடும .. | நெல்வயல் .. | கலற்றறவிலிருக்கும், ஈ. ஜே. ஸெண்டிய .. .. | 0 | 0 | 2·3 |
| 2 | எற்மினிகம்மனகும்புற அல்லது அஸ்வெடும | நெல்வயல் .. | கலற்றறவிலிருக்கும், (1) ஜே. ஸெண்டிய, (2) ஜே. கற்றன, (3) ஜே. பிஞ்சி உக்குவா, (4) ஜே. பீ. குணவார்டின, (5) ஜே. மொகோத்தா, (6) ஜே. கறுணடாசா, (7) ஜே. குணடறு, (8) ஜே. சன்டெறு, (9) ஜே. இறி மெனிகா, (10) ஆர். றங்கிற, உடுவெவெவவிலிருக்கும் (11) ஈ. இறி சண்டா, (12) ஈ. கறு | 0 | 0 | 1·6 |
| 3 | கெடெபெவற்ற அல்லது பகல வற்ற | வெறும் தரை | கலற்றறவிலிருக்கும் (1) ஜே. சென்டிய, (2) ஜே. கற்றன, (3) ஜே. குணடறு, (4) ஜே. சன்டெறு, (5) ஜே. இறிமெனிகா, (6) ஜே. பீ. குணவார்டின, (7) ஜே. மொகோத்தா, (8) ஜே. பிஞ்சிஉக்குவா, (9) ஜே. கம்னடாசா | 0 | 0 | 0·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1939ம் ஸ்ரீ (செப்றெம்பர் புரட்டாசி மாதம் 28 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு உசப்பிற்றிய பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள) உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலைக் கச்சேரி,
1939 ம் ஸ்ரீ (ஓகஸ்ட்) ஆவணிமீ 10 ந் உ.

ஆர். அலுவிஹாறே,
உதவி அரசாட்சி ஏசண்டு.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.